19th August 1960]

(ஆ) அப்படியானால், எவ்வளவு பணம் என்ன காரணத்திற்காக?

(இ) 1960-ல் எவ்வளவு பணம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரிக்கை வந்துள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Yes, Sir.

(ஆ) & (இ) During 1959–60, a total sum of Rs. 4,402.57 (Rupees four thousand, four hundred and two and naye Paise fifty-seven only) due from three liquidated co-operative societies was written-off by the District Co-operative Central Bank, Vellore, as these societies had no realisable assets. During the current year, one proposal for the write-off of a sum of Rs. 3,299.98 (Rupees three thousand two hundred and ninety-nine and naya Paise ninety-eight only) due from Achamangalam Co-operative Society (liquidated) was received. This amount was also written off by the bank.

S.S.L.C. Examination

* 315-(அ Q.—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் மாறுதல் செய்வது சம்பந்தமாக அரசாங்கத்தாரால் பரிசிலனை ஏதாவது நடத்தப்பட்டு வருகிறதா?

(ஆ) அவ்வாறு பரிசிலனை நடத்தப்பட்டுவரின் விவரங்கள் யாவை?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) & (ஆ) The question of reform of examinations in general is being considered by the Government of India and organisations under them in consultation with the State Governments. This Government are co-operating in the Seminars and Conferences held on this subject. Concrete proposals in regard to the reform of the present system of examination have not so far emerged.

SRI K. ANBAZHAGAN : இந்தக் கேள்வியில், 'எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு நடத்துவதிலே ஏதேனும் மாற்றம் இருக்குமா' என்பது அடிப்படைக் கேள்வியாக அமைந்திருக்கிறது. எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு நடத்தி, அதற்குப் பிறகு, ஹையர் செகண்டரிக்கு மற்றொரு தேர்வு நடத்தும் நிலைமை ஏற்படுமா? அப்படியானால், ஓராண்டுக்கு இரண்டு தேர்வுகள் எழுதவேண்டிய நிலைமை மாணவர்களுக்கு ஏற்படுமல்லவா?

THE HON. SRI C. SUBRAMANIAM : பொதுவாக பரீட்சை முறையை மாற்றியமைக்க ஏதாவது பரிசீலனையில் இருக்கிறதா என்று கேட்டிருக்கும் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். பத்தாவது வகுப்பு தீர்ந்ததற்குப் பிறகு ஒரு பரீட்சையும், 11-வது வகுப்பு தீர்ந்ததற்குப் பிறகு ஒரு பரீட்சையும் நடத்துவதா என்ற பிரச்னை தனியாக விவாதிக்கப்பட வேண்டியது.